உ

அம்பிகை துணை.

மதுரை

மீனாட்சியம்மன்

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

இவை

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

53

பார்வதி அண்டு கம்பெனி,
நெ. 34. ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

ரூபாவதி

சிதம்பரசாமியார்.

(இது ஓர் நூதன துப்பறியும் தமிழ் நாவல்)

இதில், கதாநாயகியாகிய ரூபாவதியிட மிருக்கும் இரகசிய கடிதத்தை மேகநாதப் பிள்ளை யென்பவன் கைக்கொள்ள எண்ணி, மகாயோகிபோல் நடித்து வஞ்சனைத் தொழில்களையே மேற்கொண்டு திரியும் சிதம்பரசாமியாரின் உதவியினால் அக்கடிதத்தைப்பெற அந்த ரூபாவதியையே விவாகஞ் செய்துகொள்ள முயலுவதும், ஒரு நாள் திடீரென்று ரூபாவதியும் இரகசிய கடிதமும் காணாமற் போவதும், பிறகு துப்பறியும் நாகலிங்கம் சிதம்பர சாமியார் பாதாள அறையில் அநேக கஷ்டங்களை அனுபவிப்பதும், கடைசியில் நாகலிங்கன் சிதம்பர சாமியாரை செங்கற்பட்டிலுள்ள ஒரு ஓட்டலில் கண்டு பிடித்து அவ்வஞ்சகனிடத்திலிருந்த இரகசிய கடிதத்தை வாங்குவதும், சிதம்பர சாமியார் உடனே தற்கொலை புரிந்து கொள்ளுவதும் ஆகிய பற்பல விஷயங்கள் மிகு அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. இடை இடையே துப்பறியும் நாகலிங்கன் சாமர்த்தியங்கள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியது. அதிலும், மேற்சொன்ன சம்பவங்களன்றி உடனுக் குடனே மனம் திடுக்கிடக் கூடிய ஆச்சரியகரமான கோரக் கொலைகளும் கோர்ட்டின் விசாரணைத் தீர்ப்புகளும், ரூபாவதி முடிவில் தான் காதலித்த நாயகனையே மணம் புரிவதும், அநேக சம்பாஷணைகளும் பொருந்தியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதேயாகும். இதன் விலை அணு 0 12 0 0

உ

அம்பிகை துணை.

மதுரை

மீனாட்சியம்மன்

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

எனக்குஅயன் விதிப்படியோ
பூருவத்தின் செயல்தானோ வேதோவம்மா
உனக்கடிமை யானபின்பு
யேதுகுறைவந்தாலும் யுனக்கேபாரம்
வனக்கிளியே மலர்த்திருவே
சொக்கரிடபங்கில்வளர் வனசமாதே
யென்மனக்கவலையார்க்குரைப்பேன்
யெனக்கிறங்கவேண்டுமம்மா மதுரைவாழ்வே. 1

இனம்பிரிந்த மானதுபோல்
உடல்பதைத்தவலுமையோ டிளைத்தென்னாளும்

மனம்பதறி உழன்றுழன்று
அடியேனுக்கருள்சொற்ற கல்நெஞ்சோதான்
நிசம்படைத்த பெருக்கமதோ
திருவனந்தம்பராமுகமோ தாயேயென்மேல்
வனம்பரவிக் கடம்பவன
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 2

தாயிழன்ற கன்றதுபோல்
பாதவித்துநிலைகுலைந்து தவித்தென்னாளும்
தீயிலும் மெழுகதுபோ
லுருகிமனம்வெருங்கூட்டாய் திகைத்தேனம்மா
தூயமலர் புரந்திருவே
நடம்புரியும்பதத்தாளே தோகைமாதே
மாயவற்கு சகோதரியே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 3

பொல்லாத கெடுநீலி
பழிக்கஞ்சிபழிசுமக்கப் போறாய்போறாய்
சொல்லாத நாளுமுண்டோ
சொன்னாலுங்கேட்கிலேயோ யென்சொற்கூந்தல்

யெல்லாரும் வாழ்ந்திருக்க
நானொருவன்தாழ்ந்திருக்க இயலோ அம்மா
வல்லாறு களபமுலை
மாமயிலே மீனாட்சி மதுரைத்தாயே. 4

இருபொழுது வறுமையினா
லனுதினமும்பிணியதனா லிளைத்துவாடி
உருகுவது அயன்விதியோ
அல்லவென்று லுன்செயலோ உரைக்கமாட்டேன்
திருவுருவே அருளொளியே
தெள்ளமுர்தேசேயிழையே தேவர்போற்றும்
மருவணியுங் குழலணங்கே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 5

நச்சுகின்ற போதுபே
ருலகில்மயங்கிவருமையில் னலிந்தென்னாளும்
சஞ்சலமே சமுத்திரமாய்
அலையதனில்துரும்பதுபோல் தவித்தேனம்மா
கொஞ்சுகிளி மொழியாளே
கஞ்சமலர்காத்தாளே தோகைமானே

வஞ்சியிடைத் திருவனங்கை
 சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 6

அதிமதுர விதரணம்
 பாடுவதுஉன்செயலோ அதுவல்லாமல்
நதிதரித்தோ ரிடப்பாகம்
 விளங்குகின்றமாமயிலே நளினமானே
கெதிபெறவே யடியேனுக்
 குனதுபதந்தந்தருள்வாய் கிருபைவைத்து
மதினுதல்போல் திருவனங்கை
 சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 7

உலையிலிடு மெழுகதுபோ
 லுருகிமனம் வெங்கூடா யுலர்ந்துவாடி
நிலைகுலைந்து மதிமயங்கி
 நின்றுமிகபரதவிக்க நீதியோசொல்
கலைமகளே வடிவனங்கை
 மகலமுகத்திருமாலே கருணையாளே
மலைமகளே அகந்தழைக்கும்
 சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 8

இளமைதனில் வருமையினால்
மனதுமிகநொந்துருகி இடைந்துவாடி
விளைநிலத்தில் களர்விழுந்த
வாரதுபோலடியேனும் விளங்கநின்றேன்
குளையுடச்சி யன்னநடை
குயில்மொழிச்சி நீகருணைகூர்ந்தாட்சி
மழலைமொழி குயிலனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 9

திடமுடனே யுனைப்பாட
செல்வம்வுண்டாம் கல்வியுண்டாம்
அடவுடனே யிப்புவியில்
யெந்தனுடமொழிக்கிரங்கி அருளேசெய்து
சடைமுடியா ரிடப்பாகம்
பச்சைநிறமாய்நின்ற தையல்மானே
மடமயிலே உன்னுடைய
மலர்ப்பாதம்தந்தருள்வாய் மதுரைத்தாயே. 10

மதுரை மீனாட்சியம்மன்
அறுசீரடி யாசிரிய விருத்தம்
முற்றிற்று.

பார்வதி அண்டு கம்பெனி,
34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை, மதராஸ்.

விநாயகபுராண வசனம்.

எக்காரியங்களும் விக்கினமின்றி நிறைவேறும் பொருட்டு சகலராலும் வழிபட்டுவரும் கடவுள் விநாயக பெருமாளே யாதலால் அன்னவரின் திருவிளை யாடல்களும் அவரைப் பூஜித்து முத்தியடைந்தவர்கள் சரித்திரங்களும், அவரைப் பூஜிப்பதற்குறிய சோடசம், அஷ்டோத்திரம், சகஸ்ரநாமங்கள் முதலான மந்திரங்களும் தெளிவான தமிழ் நடையில் எழுதி சகலரும் வாசித்தறியும்பொருட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூபா 4

ஞானவெட்டியான் மூலமும்-உரையும் 1500

இந்த அருமையான நூலானது. மகா மகிமைபொருந்திய திருவள்ளுவநாயனாரால் அருளிச்செய்யப்பட்டதென்று யாவரும் உணர்ந்த விஷயம்.

இதில் அடங்கியிருக்கும் விஷயங்கள்.

சரீரதத்துவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், பூர்ணநிலை, பொய்க்குரு, மெய்க்குரு, கருவிவரம், வாதவித்தை, முப்பூமுடித்தல், வாசிதாரணை, ஆயுள்வளர்க்கும்விதி, கர்ப்பமுண்ணும்விதி இன்னும் பல விஷயங்கள் யனுசரித்து அவ்வவ்வழியில் நல்ல தேர்ச்சியை யடைவதற்கு யாதொரு தடையுமிராது இந்த நூல் எல்லாமதஸ்தர்களும் இதை அவசியம் வாங்கிவாசிக்கக் கூடியதே ஆகையால் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கக் கடமைப்பட்டவர்களேயென்று உறுதியாய் விநயத்துடன் சொல்லுகிறோம்.

புல் காலிகோ பயிண்டு விலை ரூபா 2 0 0